கிறது. அப்படி ஏதாவது பஞ்சாயத்து யூனியன் 1-ம் தேதியன்றே சமபளம் பட்டுவாடா செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை யென்ருல், அதுபற்றி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, நிதி பற்ருக்குறையாக உள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கு முன் கூட்டியே கல்வி மானியத்தை அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வள்ளியூர் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் அந்த வகையில் சம்பளம் அளிக்கப் பட்டது. எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் அளிக்க மேற்கொண்டு நிலைமை ஆராயப்பட்டு தக்க முடிவை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

**குடியாத்தம்-பரதராமி சாலை**

***217. வின.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தத்திலிருந்து பரதராமிக்குப் போகும் ரோட்டில் ஐந்து இடங்களில் காட்டாறுகள் உள்ளதால் மேற்படி இடங்களில் பாலங்கள் கட்டும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** அவ்விதமான செயற் குறிப்பு ஒன்றும் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த ஐந்து இடங்களும் மலைப்பிரதேசத்தில் இருப்பதால் மழைக்காலத்தில் தண்ணீர் போகக் கூடிய ஓடைகள் இருக்கின்றன. ஆகவே, வருடாவருடம் ஆடு, மாடுகளும், வண்டிகளும் இந்த வெள்ளத்தினல் அடித்துக் கொண்டு போகப்படுகின்றன என்பது அமைச்சர்களுக்குத் தெரியுமா? குறிப்பாக, ஒரு மாதத்திற்கு முன்னலே ஒரு லாரியே கவிழ்ந்து போய்விட்டது. ஆகவே, தயவு செய்து சிறிய பாலங் களைக் கட்ட அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** இதுபற்றி பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதென்ருலும், நிதிநிலை வசதி குறித்து நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க முடியாத நிலையில் இருக்கிறது. ஐந்து அல்லது ஏழு இடங்களில் பாலங்கள் கட்டப்படவேண்டும். அதற்காக 3 லட்சம் ரூபாயிலிருந்து 4 லட்சம் ரூபாய் வரை செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, திட்டத்தில் சேர்ப்பதா, அல்லது தனியாக எடுத்துக்கொள்ளப் படுவதா என்பதை யோசிக்கும் நிலையில் தற்போது இல்லை.